உ

அம்பாள் துணை



இணுவில் தெற்கில் கோயில் கொண்ட

அருள்மிகு

# கௌரி அம்பாள்

## திருவூஞ்சல்

மண்டலாபிஷேகப் பூர்த்தி தின வெளியீடு

*26.01.2012*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



இணுவில் தெற்கதில் கோயில் கொண்ட

அருள்மிகு

# கௌரி அம்பாள்

# திருவூஞ்சல்

## மண்டலாபிஷேகப் பூர்த்தி தின வெளியீடு

வெளியிடுபவர்:

## திரு. தம்பையா பராபரம்


ஆக்கம்: திருமதி வை, கணேசபிள்ளை
(கலாபூஷணம் பண்டிதை)


இணுவில் தெற்கு

26 - 01 - 2012




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை


திருவருள்மிகு
இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்
THIRUVARUL MIKU
INUVIL SRI PARARAJASEGARAP PILLAIYAR THIRUKKOVIL
சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக்குருக்கள்
சிவஸ்ரீ சோ. அரவிந்தக்குருக்கள்
Inuvil South,
Inuvil.
இணுவில் தெற்கு.
இணுவில்.
201


## ஆசிச்செய்தி

ஆசிரியப்பணிதனை அறப்பணியாக செய்தவர் நம் இணுவை ஆசிரியப்பெருந்தகை திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை அவர்கள். இயல்பாகவே இறைசக்தியின் அருளால் கவிதை புனையும் ஆற்றல் பெற்றவர் அவ்வாற்றலை ஆன்மீக உலகிற்கெனவே அர்ப்பணித்த பெருந்தகை அவரது பக்தியின் வெளிப்பாடு இன்றைய கால கட்டத்திலே பழந்தமிழ்ப் பிரபந்த இலக்கியங்களை புனருத்தாரணம் செய்யும் வகையில் எம்சீர் இணுவைப்பதியிலே நமக்கெல்லாம் அருள்பாலிக்கும் ஸ்ரீ கௌரி அம்பாளின் மீது திருவூஞ்சலாக வெளிவருகிறது. இத்திருவூஞ்சலை பக்தியுடனும் இசையுடனும் படிக்கும் அனைவரும் இந்நூலை ஆக்கிய ஆசிரியப்பெருந்தகைக்கும் இம்முயற்சியிலே பங்கு கொண்டு பணியாற்றிய அனைவருக்கும் வாழ்வில் நீண்ட ஆயுளும் எல்லா வளங்களும் பெறுக ஸ்ரீ கௌரி அம்பாளின் பாதாரவிந்தங்களை வேண்டி ஆசி கூறுகின்றேன்

வை. சோமாஸ்கந்தக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# என்னுரை

தென்னிணுவை பதியில் கோயில்கொண்டு அடியவர் களுக்கு அருள்பாலித்துவரும் அருள்மிகு கௌரி அம்பாளின் புனருத்தாரண கும்பாபிடேகம் 26. 01. 2011ல் நடைபெற்றுத் தொடர்ந்து மண்டலாபிடேகப் பூர்த்தி விழாவும் இனிது நிறைவேறிய. அன்றயதினம் இன்று அம்மன் திருவூஞ்சல் பாடியிருந்தால் நன்றாயிருக்கும் என்று அடியார்கள் கூறக்கேட்டேன். குறிப்பாகத் திருமதி க. சந்திராதேவி ஆசிரியரும் இதுவிடயமாக என்னிடம் கூறினார். அது எனது உள்ளத்தில் பதிவாகியது. அம்பாளுக்குத் திருவூஞ்சல் பாடத்திருவருள் கிடைத்தது. என்று எண்ணினேன்.

இந்த எண்ணம் நிறைவேறியது அம்பாளின் அருளால் திருவூசல் பாடிமுடித்தேன். இதற்குரிய செலவினங்களைப் திரு. தம்பையா பராபரம் தானே ஏற்றுக் கொள்வதாகக் கூறினார். இதுவும் அம்மனின் திருவருள் என்று மகிழ்கின்றேன்.

இதன் பிரகாரம் இந்தவருட இரண்டாவது மண்டலா பிடேகப் பூர்த்தித் தினவிழாவின் போது (26.01.2012 வியாழக்கிழமை) இத்திருவூஞசல் அடியார்கள் கரங்களில் கிடைக்க அம்பாள் அருள்பாலித்துள்ளார்.

இதற்குச் சிறந்த ஒரு ஆசியுரையை எமது ஸ்ரீ பரராச சேகரப்பிள்ளையார் ஆலயப் பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ. வை. சோமாஸ்கந்த ஐயா அவர்கள் அளித்துள்ளார் கள். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். இதனை உரிய காலத்தில் வெளியிட அச்சிட்டுத்தந்த கஜன் அச்சகத்தினருக்கும் நன்றியுடையேன்.

நன்றியுடன்

**கலாபூஷணம் திருமதி வை. கணேசபிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ

## இணுவில் அருள்மிகு
## கௌரி அம்பாள் திருவூஞ்சல்



காப்பு

நாற்றிசையும் நல்லகோபுரங்கள் உன் பெருமை
பேசிநிற்கப் பக்தர்கள் நிதம்
போற்றி வழிபாடாற்றுங் கோயில் இணுவைப்
பரராச சேகரனே சித்திதரும்
வெற்றிக்கணபதியே முத்தமிழை அவ்வைக்கு
இனிதெடுத்துரைத்தவனே தென்னிணுவைப்பதி
வீற்றிருக்கும் உமையாளாம் கௌரி அன்னைமேல்
ஊஞ்சல்பாட நின்கழலே காப்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 ஓதுகலை வேதநெறி நான்கும் நல்ல தூண்களாக
சிவாகமங்களே மேல் விட்டமாக
ஓமெனும் பிரணவமந்திரமே தங்கப்பீடமாக
கவின் கலைகள் முத்துமணித் தாமங்களாக
போதமிகு திருமுறைகள் என்னும் வடங்கள் மாட்டி
நாதவிந்து சக்திபீடமேறிஉயர்
சீதமிகு பொற் தவிசமர்ந்து புவனமுய்ய அன்னை
கௌரி சக்தியே! பொன்னுசல் ஆடியருள்க!

2. அடியவர்கள அணிதிரண்டு உன்நாமம் பாடியாட
நாமகளோடு பூமகளும் மலைமகளும்
நாடியேவந்து வடந் தொட்டாட்ட உமையவளும்
சிவனாரும் மகிழ்ந்தே ஆசிகூற
கூடியே கணபதியும் கந்தனும் ஓடிவந்து மகிழச்சி
கொண்டாட நாரதமுனியும் இசை
பாடியே வணங்கி வாழ்த்திநிற்க இணுவையம் பதிமேவும்
உமையவளே! கௌரித்தாயே! ஆடீருஞ்சல்

3. முத்துமணி வைரத்தோடாட காதிலணி குண்டலங்கள்.
தானாட முந்தானைப் பட்டாட
கொத்து மலர்க்கோதை குழலாடகையிலணி வளையிணங்கள்
கலந்தேயாட மேகலையுமிடையுமாட
சித்தர்களோடு பக்தர்கள் சேர்ந்துஆட முத்துமாரி
அம்மனோடு காளித் தாயுமாட
முத்தர்கள் மெய்மறந்தாடச் சிவனாட உமையாட
உலகமாட உமைகௌரியே! ஆடீருஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வானுயர்ந்த தென்னை பலா மாமரங்களோடு
வேப்பமரச் சோலை நிழலின்கிழே
தேனுந்து மலர்ப்பொழிலினூடு வில்வமுமேவி
நிற்கக் கோயில் கொண்ட தாயே!
மானுடப்பிறவி மகத்தானபிறவி என்றுணரத் தாயாகி
நின்றவளே! ஆதிசக்தி நாயகியே!
வானுந்தி மழை பொழியப் பாரெலாம் சிறக்க
அருள்தரும் அன்னைகௌரியே! அம்மா ஆடீருஞ்சல்

5. ஏட்டிலும் எழுத்திலும் எழுதமுடியாத அரும்பொருளே1
தென்இணுவையம் பதி உறைபவளே!
பாட்டிலும் பயனிலும் பொருள் நயத்திலும் உன்நாமம்
ஒலித்திடும் உமையவளே! கௌரியே!
ஆட்டிடுங் கரங்கள் ஆயிரங் கொண்டவளே! இமையம்
விட்டிறங்கி இங்குவந்து கோயில் கொண்டயம்மா
வீட்டின்பம் விளைவோர்க்கு வேப்பிலைக் கர்த்தாலே
வினைநீக்கும் காரிகையே ஆடீருஞ்சல

6. உளனாய் உயிராய் உயிருக்குள் ஒளியாய் நின்றுலவும்
ஆதிசக்தியே! உமையவளே! சுந்தரியே!
வானாய் வளியாய் காற்றாய் வருஞ்சுடர் மூன்றாய்
நிலமாகி நின்றுலவும் கற்பகமே!
அன்னையே! அம்பிகையே! புவனமுழுதாளும் புவனேஸ்வரியே!
பாதிசிவனாகி நிற்கும் பார்வதியே! அம்மா
உன்னை நம்புமடியவர்க்கு அருள்செய்ய எழுந்து
வந்து பொற்தவிசில் ஏறி ஊஞ்சலாடி அருள்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நாடும் அடியவர் உள்ளத்தில் நயந்துகுடியிருக்கும்
நாயகியே சிம்ம வாகினியே!
பாடும் அடியவர் பக்கத்தில் இருப்பவளே அகிலாண்ட
கோடியே! அகண்ட பரிபூரணியே!
வாடும் உயிர்கள் வாட்டம்தீர்க்கும் அன்னபூரணியே!
கன்னியே! கௌரித் தாயே!
ஓடும் உதிரமும்நீயே! உணர்வும்நீயே! கண்ணை
இமைபோல் எமைக்காப்பவளே! ஆடீரூஞ்சல்

8. பாடி உன்னைப்பரவுவார் பக்தி கொண்டாட
நாரணனனும் நான்முகனும் வேதமோத
தேடிவந்து கலைமகளும் திருமகளும் கவரிவீசப்
பூதகணங்கள் பொலிந்து நின்றாட
நாடிவந்து இருடிகளும் முனிவர்களும் தாயே!
என்று மலர்கள் தூவி வணங்க
கூடிநின்று கும்பிடுவார் அடியவர் மனத்துயர்
போக்க அம்பிகையே! ஆடீரூஞ்சல்

9. தாய்க்குத் தாயானவளே தயாபரியே தத்துவமே
ஓங்காரியே! ஒய்யாரியே! ஓம்சக்தியே!
மாய்க்கும் பிறவிப்பிணி தீர்ப்பவளே!அருள்விருந்தே
அன்பர் களிக்க ஆடீரூஞ்சல்
தாய்க் குலங்கள் காக்கும் அம்பிகையே! ஆடீரூஞ்ச
திரிசூல நாயகியே! ஆடீரூஞ்சல்
நோய்க்கு மருந்தானவளே! மகிழ்ந்து ஆடீரூஞ்சல
இணுவிலுறை கௌரி அம்மா! ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஓதுமறை வேதவொலி மந்திரங்கள் நாளுங்கேட்டுப்
பூசைகளும் பண்ணிசையும் ஏற்று
தீதகலத் திருவிழாப் பொலிவு கண்டின்புற்று
தீமிதிக்கும் அடியவர்க்கு மருள்செய்து
போது மலர்த்தாமந் தந்து பொங்கல்மடைபரவிப்
பூசிப்பவர் மனங்குளிர ஆடீரூஞ்சல்
மாதுமையே மங்கலகுங்கும ரூபிணியே அம்மா
கௌரித்தாயே எம்வினைதீர ஆடீரூஞ்சல்

11. பார்போற்றும் பரராச சேகரன் முன்னே நின்று
அருள் பொழிய அன்னமே! ஆடீரூஞ்சல்
சீர்பொலியும் நரசிங்கவைரவரும் நடுவிளாத்தியடி
வைரவரும் துணையிருக்க ஆடீரூஞ்சல்
பேர்பரவும் இணுவிலுறை கௌரிஅம்பிகையே! ஆடீரூஞ்சல்
முதுமைதானிலாத கன்னிகையே! ஆடீரூஞ்சல்
உள்பரவும் உமையவளே! ஆடீரூஞ்சல் இணுவைப்பதி சிறக்க
உம்பர் மனங்களிக்க உவந்து ஆடீரூஞ்ல்

வாழி

அருமறையும் ஐந்தெழுத்தும் வாழி! வாழி!
அந்தணரும் ஆனினமும் வாழி! வாழி!
திருமுறையும் ஆகமமும் வாழி! வாழி!
சைவநாற் பாதம் வாழி! வாழி!
திரிசூலிவாழி! சிவஞானபோதகி வாழி!
இணுவையம்பதி வாழி! அன்னை கௌரி வாழி!
திரிபுரசுந்தரி வாழி! அருள்மேவும் அடியார்கள் வாழி!
பெண்குலம் பெருமையுடன் வாழி வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களம்

கொத்துமலர்க் கோதைக்கு ஜேய மங்களம்
கொவ்வை செவ்வாயளுக்கு ஜெய மங்களம்
நித்தம்வழிபடும் அடியார்க்கு ஜெய மங்களம்
சிவ காம சுந்தரிக்கு ஜெய மங்களம்
சித்து மாகி நின்றவட்கு ஜெயமங்களம்
சிம்ம வாகினிக்கு ஜேய மங்களம்
புத்திதத்து வமானவட்கு ஜெயமங்களம் இணுவைப்
பதி யுறை கௌரிக்கு ஜெயமங்களம்
சுபமங்களம்

எச்சரிக்கை

சோதி வடிவானவளே! எச்சரீக்கை
சுடலையாண்டி நாயகியே! எச்சரீக்கை
வேதியர்க்கு வேதியளே! எச்சரீக்கை
வேதப் பொருளானவளே! எச்சரீக்கை
சங்கு சக்கர தாரி எச்சரீக்கை
திரிசூல நாயகியே! எச்சரீக்கை
சிங்கத்தில் ஏறி வருபவளே! எச்சரீக்கை
சிவசங்கரி கௌரியே! எச்சரீக்கை

பராக்கு

போறி புலனுக் கெட்டாதவளே பராக்கு
வெறி கொண்டமகிஷனை வதம்செய்தவளே பராக்கு
சர்வலோக நாயகியே கௌரியே பராக்கு
பர்வத நாயகியே பராக்கு பாராளும் தேவியே பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

மூலலாலி மூவா முதலேலாலி - சிவ
கௌரிலாலி சிவ காமிலாலி
சீல லாலி சிவசக்திலாலி - ஆதி
சிவன் பாதிலாலி பரையேலாலி
கோல லாலி கோமள வல்லிலாலி - நவ
சக்திலாலி சகலகலாவல்லி லாலி
பூலோக நாயகி லாலி திரிசூலிலாலி - எம்
இணுவைப்பதி அன்னை கௌரி லாலி

சுபம்

ஆக்கம் :

**கலாபூஷணம் பண்டிதை**
**திருமதி வை. கணேசபிள்ளை ஆசிரியர்**
**இணுவில் தெற்கு**
**19.01.2012**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஜன் பிறிண்டேர்ஸ்
கோண்டாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org